மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம்

அசேஷம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

தீர்மான நகல்

நாள் : 20-07-2024

கூட்ட எண்.____

மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், அசேஷம் ஊராட்சி மன்றத்தின் ____வது கூட்டம், 2024ம் வருடம், ஜூலை மாதம், 20ம் தேதி சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.K.ரவி அவர்கள் தலைமையில் சாதாரண கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைவர் மற்றும் ____ உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பொருள் எண்._____

திருவாரூர் மாவட்டம் - மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், அசேஷம் ஊராட்சி மற்றும் கிராமம், புல எண்கள்.234A/1 & 237A/9 கூடுதல் விஸ்தீரணம் 35200 சதுரமீட்டர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு கடித எண். ROC No.29350/2024/TVR/2024/TCP, Dated : 05-07-2024 மற்றும் ம.வ./மா.ந.ஊ.அ(TVR)SWP எண்.50/2024-ன் படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் தெரு விளக்குகள் அமைப்பது குறித்து தீர்மானிக்க.

தீர்மானம் எண்.50/2024, நாள் : 20-07-2024

திருவாரூர் மாவட்டம் - மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், அசேஷம் ஊராட்சி மற்றும் கிராமம், புல எண்கள்.234A/1 & 237A/9 கூடுதல் விஸ்தீரணம் 35200 சதுரமீட்டர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு கடித எண். ROC No.29350/2024/TVR/2024/TCP, Dated : 05-07-2024 மற்றும் ம.வ./மா.ந.ஊ.அ(TVR)SWP எண்.50/2024-ன் படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது இடங்கள் தான ஆவண எண்கள்.3350/2024 மற்றும் 3353/2024 ஆகியவைகளின்படி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாலைகள் ஊராட்சி சாலைகள் ஆகும். ஆகவே மேற்படி மனைப்பிரிவில் மனுதாரர்கள் வெங்கட்ராமன், விஸ்வநாதன் ஆகியோர்களின் பவர் ஏஜண்ட், V.சரோஜா அவர்கள் ஊராட்சி தலைவர் பெயரில் தெரு விளக்குகள் அமைப்பது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

தலைவர்,

அசேஷம் ஊராட்சி.

அசேஷம் ஊராட்சி ஒன்றியம்

அசேஷம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை - திரு.K.ரவி

ந.க.எண். 09 /2024 நாள் : 20-07-2024

பொருள் : மனைப்பிரிவு-மாவட்ட நகர் ஊரமைப்பு இயக்குநர், திருவாரூர் மாவட்டம் - மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், அசேஷம் ஊராட்சி மற்றும் அசேஷம் கிராமம், புல எண்கள்.234A/1 மற்றும் 237A/9 கூடுதல் விஸ்தீரணம் 35200 சதுர மீட்டர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1. உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களின் கடித எண். ROC No.29350/2024/TVR/2024/TCP, Dated : 05-07-2024

2. மன்னார்குடி சார் பதிவாளர் அலுவலகம் தான ஆவண எண்கள்.3350/2024 மற்றும் 3353/2024.

உத்தரவு :

பார்வை 1ல் காணும் துணை இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களின் உத்தரவில் கண்ட திருவாரூர் மாவட்டம் - மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், அசேஷம் ஊராட்சி மற்றும் அசேஷம் கிராமம், புல எண்கள்.234A/1 மற்றும் 237A/9 கூடுதல் விஸ்தீரணம் 35200 சதுர மீட்டர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு கடித எண். ROC No.29350/2024/TVR/2024/TCP, Dated : 05-07-2024-ல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்ட அனுமதி கோப்பு எண்.KQSMVFG3(29350/2024/TVR) மற்றும் ம.வ./மா.ந.ஊ.அ (TVR)SWP எண்.50/2024ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மன்னார்குடி சார் பதிவாளர் அலுவலக ஆவண் எண்கள். 3350/2024 மற்றும் 3353/2024 வாயிலாக தானப் பத்திரம் பதிவு செய்து ஊராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. உரிய கட்டணங்களும் உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்கள் அலுவலகத்தில் வங்கி மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி செயல்படுத்த வேண்டும் என தெரிவித்து மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

தலைவர்,
அசேஷம் ஊராட்சி.

இணைப்பு :

1. மனைப்பிரிவு வரைபடம்
2. மனைப்பிரிவு நிபந்தனைகள்.

பெறுநர் :

(1) திரு.**வெங்கட்ராமன்**, த/பெ.லேட்.சுப்ரமணியன்
(2) திரு.**விஸ்வநாதன்**, த/பெ.லேட்.வரதசுப்ரமணியன்

V.சரோஜா (வெங்கட்ராமன், விஸ்வநாதன் ஆகியோர்களின் பவர் ஏஜண்ட்)
க/பெ.விஸ்வநாதன்,
32/37, கீழ இரண்டாம் தெரு,
மன்னார்குடி டவுன் - 614 001,
திருவாரூர் மாவட்டம்.

மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், அசேஷம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு.K.ரவி

ந.க.எண். 09 /2024 நாள் : 20-07-2024

பொருள் : மனைப்பிரிவு ஒப்புதல் : திருவாரூர் மாவட்டம் - மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், அசேஷம் ஊராட்சி மற்றும் அசேஷம் கிராமம், புல எண்கள்.234A/1 மற்றும் 237A/9 ஆகியவைகளில் அமைந்துள்ள 35200 சதுரமீட்டர் அமைந்துள்ள மனைப்பிரிவை உதவி இயக்குநர் திருவாரூர் அவர்கள் ஒப்புதல் அளித்த வரைபடத்தில் 1 முதல் 231 மனைகளுக்கும் மற்றும் மனுதாரர் மனைக்கும் இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடல் தொடர்பாக.

பார்வை : 1. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ஒப்புதல் இணையதள விண்ணப்ப எண்.ROC No.29350/2024/TVR/2024/TCP, Dated : 05-07-2024

2. இதர தொடர்பாக ஆவணங்கள்.

உத்தரவு :

திருவாரூர் மாவட்டம் - மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், அசேஷம் ஊராட்சி மற்றும் அசேஷம் கிராமம், புல எண்கள்.234A/1 மற்றும் 237A/9 ஆகியவைகளில் அமைந்துள்ள 35200 சதுரமீட்டர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவாரூர் அவர்களின் செயலாணையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் 1 முதல் 231 மனைகளுக்கும் மற்றும் மனுதாரர் மனைக்கும் உரிய கட்டணம் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

1. கூராய்வு கட்டணமாக மனை ஒன்றுக்கு ரு.1000/- வீதம் 231 மனைகளுக்கு ரு.2,31,000/-த்தை அசேஷம் ஊராட்சி வங்கி கணக்கில் வங்கி பரிவர்த்தணை மூலம் 20-07-2024ல் செலுத்தப்பட்டுள்ளது.

2. வழிகாட்டி மதிப்பு 3% வீதம் கட்டணம் ரு.1,05,600/- (ருபாய் ஒரு லட்சத்து ஐந்தாயிரத்து அறுநூறு மட்டும்) ஆன்லைன் (இ-செல்லான்) முலம் உரிய வங்கி கணக்கில் 20-07-2024ல் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 1 முதல் 231 மனைகளுக்கும் மற்றும் மனுதாரர் மனைக்கும் உரிய கட்டணம் செலுத்தியுள்ளதாலும், சாலைகள், பூங்காக்கள் அமைப்பதற்கு உரிய இடம் ஊராட்சிக்கு தானப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட மனைகளை ஊராட்சி மன்ற தீர்மான எண்.50-ல் ஒப்புதல் வழங்கியுள்ளதாலும் (தீர்மான எண்.50/2024, நாள் : 20-07-2024) இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

(பார்வை : 1ல் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவாரூர் அவர்களின் செயலாணையின் நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும்)

ஊராட்சி மன்ற தலைவர்,
அசேஷம்.

பெறுநர் :

(1) திரு.**வெங்கட்ராமன்**, த/பெ.லேட்.சுப்ரமணியன்
(2) திரு.**விஸ்வநாதன்**, த/பெ.லேட்.வரதசுப்ரமணியன்

V.சரோஜா (வெங்கட்ராமன், விஸ்வநாதன் ஆகியோர்களின் பவர் ஏஜண்ட்)
க/பெ.விஸ்வநாதன்,
32/37, கீழ இரண்டாம் தெரு,
மன்னார்குடி டவுன் - 614 001,
திருவாரூர் மாவட்டம்.